# இந்தி ஒரு நாளும் பொது மொழியாகாது

## பாஷாவாரி மாகாணம் பிரிக்க வேண்டியது அவசியம்.

### ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு

### அபிப்பிராய பேதங்கள் ஒழிய வேண்டும்

## ஸர். மகமது யாக்கூப் அபிப்பிராயம்

பெஜவாடா, ஜுலை 22.

தென்னிந்திய சுற்றுப்பிரயாணத்தை முடித்து விட்டு சிம்லாவுக்குச் செல்லும் இந்திய சர்க்கார் வர்த்தக மெம்பர், சர். முகமதுயாக்கூப் அவர்களை ஒரு நிருபர் பேட்டி கண்டு தமது தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தைக் குறித்து தமது அபிப்பிராயம் என்ன என்று கேட்டபோது அவர் அளித்த பதில் வருமாறு:-

### சமஸ்தானங்கள்.

"தென்னிந்தியா ஓர் அழகிய தேசம். நான் குறுகிய காலம் தான் இங்கு தங்கியிருந்தேன். அந்தக்குறுகிய காலத்திலே மைசூர், கொச்சி, திருவிதாங்கூர் ஆகிய மூன்று சமஸ்தானங்களையும் சுற்றிப் பார்த்தேன். மேலே சொன்ன சமஸ்தானங்களின் ஆட்சி காங்கரஸ் ஆதிக்கத்திலிருக்கும் மாகாண ஆட்சியைப் போல் சிறந்து விளங்குகிறது அதைவிடமேலாகவே விளங்குகிறதென்றுகூட சொல்லலாம். மூன்றுசமஸ்தானங்களிலும் மக்கள்திருப்தியோடு செழிப்போடு இருக்கிறார்கள்."

### இந்தி கட்டாய பாடம்.

இந்தி கட்டாயபாடமாக புகுத்துவதைக் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

"இந்தியைக் கட்டாயபாடமாகப் புகுத்த உத்தேசித்திருக்கும் சர்க்கார் திட்டத்துக்கு எதிர்ப்பு பலமாக இருந்து வருகிறது. எனது மாகாணத்தில் தமிழோ, தெலுங்கோ கட்டாயபாடமாகப் புகுத்தப்படுமேயானால் இந்தி எதிர்ப்பாளர் கருதுவது போல் தான் நானும் கருதுவேன். ஒரு பாஷை பேசப்படும் மாகாணத்தில் பிரிதொரு பாஷையை கட்டாயபாடமாகப்புகுத்துவதில் ஆட்சேபணை இருந்தே தீரும். இந்தியர்களுக்குள் இந்தி ஒரு நாளும் பொதுமொழியாக இருக்க முடியாது"

### பாஷாவாரி மாகணப் பிரிவினை.

"பாஷாவாரி மாகாணம் பிரிக்க வேண்டும் என்று செய்யும் கிளர்ச்சி மிக முக்கியமானது. இப் பிரச்சினை வட்ட மேஜை மகாநாட்டில் பிரஸ்தாபித்திருக்க வேண்டிய விஷயம். அவ்வாறு செய்யாது விட்டது பெரிய தவறு.

### ஹிந்து முஸ்லிம் சமரசம்.

ஹிந்து முஸ்லிம் சமரசப் பேச்சு சம்பந்தமாக தோழர் காந்திக்கும், பண்டித நேருவுக்கும், ஜனாப் ஜின்னாவுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துகள் வெளியிடப்பட்டதைக் குறித்து சர். மகமது யாக்கூப் தெரிவித்ததாவது:—

"ஹிந்து முஸ்லிம்களுக்குள் இருக்கிற அபிப்பிராய பேதங்கள் வாஸ்தவத்திலே நீங்கினால் அல்லாது உருவான ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம் ஏற்படாது. ஐக்கியப் பேச்சும் கைவிடப்பட்டு விட்டது."